## 4. இன்றைய வாய்வழி வெளிப்பாட்டு கற்பித்தலின் மூன்று மையக் கருத்துகள்

வாய்வழி வெளிப்பாடு என்பது மிகப் பெரிய துறை, இதில் பலமொழி இலக்கியங்கள் அடங்கியுள்ளன. எடுத்துக்காட்டாக, "வகுப்பு என்ற அவையில் உரையாடல்", "கவிதையை ஒப்புவித்தல்" என்ற இரு பயிற்சிகளிலும், ஒவ்வொரு மொழிகளின் பாரம்பரியங்களும் வெளிப்படுத்தப்படுகின்றன. எனவே, இதில் வரும் மதியுரைகள், ஐரோப்பிய நாடுகளுக்கு குடிபெயர்ந்த தங்களுடைய தாய்மொழியை கற்பிக்க விரும்பும் மக்களுக்கே பொருந்தும்.

### அ) வாய்வழி வெளிப்பாட்டின் நோக்கங்கள்

கேட்டல் மற்றும் பேசுதல் பரப்புகளில் கல்வி ஊக்குவிப்பின் உயர் இலக்கு மாணவர்களின் செயற்பாட்டுக்குரிய தொடர்பாடல் தகைமையினை வலுப்படுத்துவதாகும். இது வழமையான பாடவிதான வகுப்புகளிலும் பா.மொ.க வினும் அகவைபொருத்தப் பாங்கிலும் எழுத்துமொழியின் தகைமைப் பயன்பாட்டுக்கு இட்டுச்செல்லும். மேலதிக இலக்குக் கண்காணிப்பிலும் இடம்பெறும்.

பேசுதல் பயிற்சிகளின் (எ.கா. கலந்துரையாடலுக்கும், தனி ஒருவராக பேசுவதற்கும் உள்ள நோக்கங்களும், முறைகளும் வேறு) கற்பித்தல் முறை வேறு, அதாவது மாணவர்களை உரைநடை முறை மூலம் கற்பித்தல் வேண்டும். இதன் நோக்கங்கள் உரையாடல்கள், விவாதங்கள், பேட்டி எடுத்தல், தொலைபேசியில் பேசுதல் போன்ற செயற்பாடுகளில் மட்டுமல்லாமல், அவைகளில் தீர்மானிக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி, பேசுவதிலும் பொருந்தும். தனி ஒருவராக பேசுதல் என்பது கதை கூறுதல், ஒரு தலைப்பின் கீழ் பேசுதல், ஒரு விடயத்தை அறிமுகப்படுத்துதல் மட்டுமல்லாமல் மனப்பாடம் செய்து ஒப்புவித்தல், வாய்விட்டுப் படித்தல் மற்றும் பள்ளி நாடகங்களில் நடித்தல் போன்றன உள்ளடங்கும்.

"கேட்டல்" பகுதி பெரும்பாலும் பேசுதல் மற்றும் அதைத் தொடர்ந்து வரும் நோக்குகளுடன் பயிற்சி செய்யப்படும். எப்படி இருப்பினும், பொருத்தமான இலக்குடைய ஒப்படைகள் அவை பொருளை விளங்குதல், சனநாயக உரையாடல் ஒழுக்கம், அல்லது ஒரு செய்யுளை ஓதும் தரம் ஆகியவற்றுடன் தொடர்பற்றிருக்கலாம் – பக்கத்துணை செய்ய வேண்டுமென்பது கட்டாயமாகும். தெளிவான தேவை அல்லது குவியப்படுத்தல் இன்றி வெறுமனே கேட்டல் ஆக்கவளம் அற்றதாகும். மொழியியல் ஒழுங்கின்மைகளை, எ.கா. முதல்மொழியில் வேறுபட்ட பேச்சுமொழி மாற்றுகளை (ஒலிவகை மாதிரிகளுடன்) இனங்காணல் அல்லது தனியாள் அல்லது குழுவின் வாய்வழி வெளியீட்டின் சில தன்மைகள் தொடர்பான கூர்மையான அறிவை கண்காணிக்கத் துணைசெய்யும் கற்றல் சூழல்களிலும் கூட "வேறுபடுத்தப்பட்ட கேட்டல்" தான் இன்றியமையாத பகுதியாகும். கேட்டல் திறமைகள் இங்கு மொழியியல் உருக்காட்டியின் இன்றியமையாத உணர்வூட்டும் பகுதிக்குச் சாதகமாயுள்ளன.

தொடர்பாடற் பயிற்சிகள், கற்றல் சூழ்நிலைகள் பற்றி முதன்மையாகக் கருதும் ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட வடிவங்களைத் தவிர, இன்னொரு வகையான திறன்கள் - தொடர்பான பயிற்சிச் சூழ்நிலைகளும் உள்ளன. அது வரையறை செய்யப்பட்ட ஒரு பொருளை மையமாகக் கொண்டதல்ல, ஆனால் ஒரு மொழிப்பகுதியைக் கொண்டது, இப்பிரிவைச் சேர்ந்தனவாக முன்னர் குறிப்பிட்ட ஒற்றுமைப்பட்ட ஒலியன்களை வேறுபடுத்தும் பயிற்சிகள் (எ.கா. : č/ć. இயல் 2அ வைப் பார்க்கவும்), குறிப்பாகக் கீழ் மட்ட வகுப்புகளில் ஏனைய ஒலி வேறுபடுத்தல் மற்றும் ஒலித்தல் பயிற்சிகள் ஆகியன அமைகின்றன.

இது தொடர்பான பயிற்சிகள், ஆக்கப் பேச்சுப் பயிற்சிகள், அல்லது கட்டற்ற நெறிப்படுத்தப்பட்ட பேச்சுப் பயிற்சிகள் ஊடாக நடைபெறலாம் (ஆக்கப் பேச்சில் ஒரு வகையினைத் திரும்பத் திரும்ப மற்றும் மீள்பயிற்சி செய்யப்பட்டு அமைதல், நெறிப்படுத்தப்பட்ட பேச்சில் ஒரு மாதிரியை மாற்றுகளுடன் பின்பற்றுவது பார்க்கவும் சார்புகட்டு, தொகுதி 1 (எழுத்தை ஊக்குவித்தல்) முன்னுரையின் 4ஈ யிலும். "அடித்தளங்களும் பின்னணிகளும்" கைநூலின் இயல் 8அ விலும் விவரிக்கப்பட்டுள்ளது). பரந்த அளவில் சொற்களஞ்சியப் பணியும் விரிவாக்கமூடான வாய்மொழிப் புலப்பாட்டின் இணைப்பும் செயற்பயிற்சி தொடர்பான திறன்கள் எனக் கணக்கிடலாம். இரண்டு பகுதிகளும் பா.மொ.க வுக்கு இன்றியமையாதவை. ஏனெனில் மாணவர்களை முதல்மொழியில் மேம்பட்ட தகைமைக்கும் முடிந்த அளவு சமநிலைப்பட்ட இருமொழித் தகைமைக்கும் இட்டுச் செல்ல உதவுகின்றன. இயல்கள் 2ஆ வினையும் 2இ யினையும் பார்க்கவும்.

### ஆ) கலந்துரையாடல்கள் மற்றும் வினாக்கள் தொடர்பாக ஆசிரியர்களின் அணுகுமுறை பற்றியது

மாணவர்கள் தம் மொழித்திறன்களை விரிவாக்கவும் மேம்படுத்தவும் வேண்டுமெனில், அவர்களுக்கு போதிய நேரமும் பயன்படுத்தும் வாய்ப்புகளும் வேண்டப்படும். எந்தளவு அவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பது பெருமளவு ஆசிரியருடைய கலந்துரையாடல், வினாவுதல் தன்மையிலேயே தங்கியுள்ளது. அ என்னும் ஆசிரியர் தொடர்ந்து மரபுவழி, குறுகிய "வினவல் முறையில்" தொடர்பாடல் செய்வாராயின் (எங்கள் பிறப்பு நாட்டின் நீண்ட ஆற்றின் பெயர் என்ன?", "எங்கள் கதையின் கதைநாயகன் எங்கு வாழ்ந்தார்?" முதலியன) அவருடைய மாணவர்கள் மொழித்திறன் மேம்பாடடைய முடியாது. மாறாக, ஆ என்னும் ஆசிரியர் திறந்த வினாக்களைத் தொடுத்தும், குறுகியதை விட தூண்டிகளிலும், நம்பத் தகுந்த வினாக்களிலும் ஈடுபடுத்துவதால், மாணவர்கள் மேம்பாடடைந்து வாய்மொழி ஆக்கப் பாட்டுக்கு தாமாகவே இட்டுச்செல்லப்படுவார்கள். அத்தகைய வினாக்களுக்கு எடுத்துக்காட்டுகள்: "நம்முடைய நாட்டின் ஆறுகள், நீரோடைகள் பற்றி நீர் என்ன அறிந்துள்ளீர்?". "எங்கள் கதையின் கதாநாயகனின் நடத்தை பற்றிய உமது விருப்பு அல்லது விருப்பின்மை பற்றி விளக்குக!"

வழக்கத்துக்கு மாறாக பெருமளவு ஆசிரியர்கள் வினாவுதல் கலந்துரையாடல் அணுகுமுறையை ஓர் உள்ளுணர்வுடன் தழுவுகின்றனர் – முன்கூட்டிய தம்முடைய பள்ளிப் பட்டறிவுகளில் ஊறிப்போனமையால் இது மாணவர்கள் பேசுதற்கு மிக குறைந்த வாய்ப்புகளையே வழங்குகின்றது. தனிப்பட்ட மாணவர்களின் பங்கினை விட ஒட்டுமொத்த வழமையான ஆசிரியர்களின் பேச்சுப் பங்கு பெரும்பாலும் 20 தொடக்கம் 30 தடவை கூடியதாகும் என ஆய்வுகள் காட்டியுள்ளன. இந்நிலையிலிருந்து தம்முடைய கற்பித்தல் அணுகுமுறையை முன்னேற்றுதற்கு ஆசிரியர்கள் பின்வரும் குறிப்புகளைப் பின்பற்றவேண்டும்:

- மாணவர்களின் விடைகளை நீங்களும் மீண்டும் கூறாதீர்கள் ("ஆசிரியர் எதிரொலி" எனப்படும் இது கூறியது கூறலாகும் மற்றும் மாணவர்கள் உரத்தும் தெளிவாகவும் பேசுதலுக்குப் பழக்கப்படுவதைத் தடுக்கின்றது). இதே போல் வருந்தத்தக்கதாக, விடைகளுக்கு ஒழுங்கு முறையான பதிலாக "நன்று" "மிக நன்று" "சிறப்பு" என்பனவற்றைக் கூறல். இது ஆரம்பகால முறையான, ஆசிரியரை மையப்படுத்திய முறைமையுடன் தொடர்புறுகிறது.

- எழுத்துருக்கள், கருத்துகள், சிக்கல்கள், முரண்பாடுகளைக் கலந்துரையாடும்போது, முதன்மையாக உரையாடல் தூண்டிகள் அல்லது குறைந்த அளவில் அகலமான நம்பத்தகுந்த வினாக்களுடன் (போலியான, குறுகிய வினாக்களைத் தவிர்க்கவும்) அணுகவும். அத்தகைய தூண்டிகளை ஓர் உரையாடலுக்கான அறிமுகம், அதன் தொடர்ச்சி ஆகியவற்றுக்கு விழிப்புடன் திட்டமிடவேண்டும். அவை பெருமளவு கற்பித்தல் பயிற்சியிலிருந்து பெறப்பட்ட பட்டறிவினை உள்ளகப்படுத்தியது மட்டுமேயாகும்.

- விதிகளுக்கும் கிரியைகளுக்கும் உடன்படுதலும் வகுப்பில் அவற்றைப் பயிற்சித்தலும் பயிற்றுவிப்பாளரைப் பின்னணிக்குள் தள்ளிவிட துணை செய்கிறது. எடுத்துக்காட்டாக, குழுக் கலந்துரையாடலில் அல்லது வகுப்புக் கலந்துரையாடலில் மாணவர்கள் தங்களுக்குள்ளேயே மாறி மாறி பேசுவார்கள் அல்லது வேறொருவருக்குச் செய்தியைக் கூறுவார்கள். இது பழக்கத்திற்கு வந்து விட்டால், தொடக்கத்திலேயே ஒரு தூண்டியை அல்லது ஒப்படையை கொடுத்து விட்டால் (தானாகவே மறுமொழியை வேண்டிநிற்கும் ஆசிரியருடைய வினா அல்ல.) ஆசிரியர் கேள்வி கேட்டு மாணவர்கள் பேசுவார்கள் என்ற பழக்கம் குறைந்துவிடும்.

- மாணவரை மையப்படுத்தப்பட்ட முறைமை இதே நோக்குக்குப் பக்கத்துணைசெய்கிறது. இது குறைந்த அளவில் பேச்சு வாய்ப்புப் பங்கு தொடர்பாக ஆசிரியரின் முதன்மையான ஆதிக்க நிலையினைக் குறைக்கிறது (கைநூல் "அடித்தளங்களும் பின்னணிகளும்" இயல்கள் 5 இனையும் 6 இனையும் பார்க்க). ஒப்புக்கொண்டபடி, இது பா.மொ.க வுக்கு ஓர் அறைகூவல் பணியாகும். இங்கு பயிற்சியாளர்கள் பெரும்பாலும் ஒரே நேரத்தில் பல வகுப்புகளை அல்லது குழுக்களை முகாமைத்துவம் செய்யவேண்டியுள்ளது. இருப்பினும், இங்குகூட ஆசிரியரை மையப்படுத்திய அணுகுமுறையினை சில பொறுப்புகளை மாணவர்களுக்கு ஒதுக்குவதனூடாக மட்டுப்படுத்த முடியும்.

**இ) வாய்வழிச் செயற்றிறனைக் கண்காணித்தல், கணிப்பிடல், இலக்கு நோக்கி ஊக்கப்படுத்தல் ஆகியவற்றைக் கண்காணித்தல்**

வாய்வழிச் செயலாக்கத்தினைக் கண்காணித்தலும், ஊக்கப்படுத்தல் சார்ந்த கணிப்பீடும் எழுதப்பட்ட உரைகளைத் திருத்துவதை விட நேரம் மிகுதியாக எடுக்கும். கேட்டலும் பகுப்பாய்வு செய்தலும் ஒலி அல்லது காணொளிப் பதிவுகளுடனேயே நிகழக்கூடியனவாகும். இது நிகழக்கூடிய நோக்கினைப் பொதுவாக மீறுவதாகும். எனினும் குறிப்பிடக்கூடிய இடங்களில் (எ.கா. ஒரு மாணவன் / மாணவி ஓர் எழுத்துருவினைப் படிக்கும்போது ஒலிப்பதிவு செய்தல்) இதனைப் பயன்படுத்தவேண்டும். ஏனெனில், இது பெருந்தொகையான துல்லியமான முடிவுகளுக்கு இட்டுச்செல்லும்.

வாய்மொழித் தகைமைப் பரப்பில் பொதுமைப்படுத்தல் அதனால் மிகவும் பயனற்ற ஒப்படைகள் என்னும் இடரைத் தவிர்ப்பதற்கு இலக்கு நோக்கிய அடிப்படைகள், கண் காணிப்பு அணுகுமுறை ஆகியன பரிந்துரைக்கப்படுகின்றன. இவை, இயல்பாக, மாணவரின் அகவை, திறமை நிலை என்பவற்றுக்கேற்பச் சரிசெய்யப்பட வேண்டும். "அடித்தளங்களும் பின்னணிகளும்" கைநூலின் இயல் 7 ஐ பார்க்கவும் (ஊக்குவிப்பு – இலக்குநோக்கிய செயற்றிறன் கணிப்பீடு, பகுதி 2 இல் மிகச் சிறந்த பயிற்சி எடுத்துக்காட்டுகளுடன் உள்ளன). அவற்றை நிறைவு செய்ய சில முன்னூட்டற்குறிப்புகள் இங்குள்ளன:

- "முறைசார்" தொடர்பில், அறிவிக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் கணிப்பீடு இடம் (எ.கா. ஓர் எடுத்துரைப்பு, ஒரு நாடகத்தின் காட்சி, ஓதல், முதலியன): நிகழ்வுக்கு முன்னர், தெளிவான அடிப்படைகள் உண்டாக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும், முடியுமாயின் பல குறிப்புகளைக் கொண்ட ஓர் அடிப்படை அட்டவணை வடிவில் வழங்கல். இது மாணவர்களுக்கு கணிப்பீட்டை நம்பகத்தன்மை உடையதாக ஆக்குகின்றது. இது பின்னர் பணியினை வளர்த்தெடுப்பதற்கும் தொடர்வதற்கும் தொடக்க நிலைகளை உடனடியாக வழங்குகின்றது: பொருத்தமான பயிற்சிகளையும் சொற்பயிற்சி வடிவங்களையும் கண்டுபிடிப்பது ஆசிரியரின் வாண்மையாகும்.

  குறிப்பிடப்பட்ட அடிப்படைகளையுடைய கண்காணிப்புத் தாள்களின் இன்னொரு நன்மை என்னவெனில், மாணவர்கள் (குறைந்தது 3ஆம் தரத்திலிருந்து) அட்டவணையை நிரப்பலாம். அதனூடாக இன்றியமையாத குறிப்புகள் பற்றிய உணர்வினை வலுப்படுத்துகின்றனர். எடுத்துரைப்புகளின் மதிப்பீடு பற்றிய கணிப்பீட்டுக்கு ஓர் எ.கா. "அடிப்படைகள் மற்றும் பின்னணிகள்" என்ற நூலில் அலகு 7 பகுதி ஆ 1 இல் காணப்படுகிறது. "முதல் மொழியில் படித்தலை ஊக்கப்படுத்தல்" என்னும் தொகுதியினையும் பார்க்கவும், பகுதி #18 இல் உரத்துப் படிப்பதைத் தன்மதிப்பீடு செய்வதற்கான அட்டவணை உண்டு.

- "முறைசாரா" தொடர்பாக, சிறப்பாக அறிவிக்கப்படாத கண்காணிப்புகள் (எ.கா. குழு அல்லது வகுப்புக் கலந்துரையாடல்கள், மாணவர் எடுத்துரைப்புகள், தனியாள் படிப்புகள், அல்லது இவைபோன்ற கண்காணிக்கக் கூடிய செயலாக்கங்கள்). பயிற்றுவிப்பாளரும் முடிந்த அளவு கண்காணிப்புகள் பற்றிய குறிப்புகளை எடுத்தல் பயனுடையதாகும். ("அ மிக நெருக்கமாக கேட்கவும் மற்றவர்களுக்கு மறுமொழி கூறவும் கற்கவேண்டும்", "உ(ஸ்) ஒலியினை ஒலிப்பதில் இடர்படுகிறார்", "ஔ கட்டில்லாப் பேச்சில் நல்ல முன்னேற்றம் பெற்றுள்ளார்", முதலியன). அதைத் தொடர்ந்து, அல்லது வேறொரு பொருத்தமான நேரத்தில் ஆசிரியர் தன்னுடைய கண்காணிப்புகளை, முன்னேற்றங்களுக்கான உருப்படியான மதியுரைகளை மாணவர்களுக்கு வழங்கத் தொடர்பு கொள்வார்.